2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று (6-2-81) பகல் சுமார் 11 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக்கொள்ளும் நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் புரிந்துள்ளார் என்று அவை கருதுகிறது. அவருக்கு பார்வையாளர் மாடத்திற்கு வருவதற்கான அனுமதி சீட்டு வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்.

6. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர் மீது நடவடிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :—

'' இன்று (6–2–1981) பகல் சுமார் 11-00 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், கீழ்க்கபிஸ்தலத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, 9 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிப்பவருமான திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவரது இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டு என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமக்கு பிரீசிடெண்ட் இருக்கிறது. 7 நாள் என்பது மிகவும் அதிகம். 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒட்டு மொத்த மாக இந்த அவையை அவமதித்தால் நம் எல்லோரையும் அவமதித்தது போல்தான். இதற்கு நீங்கள் பரிந்து பேசுவது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த அவையினுடைய மதிப்பு காப் பாற்றப்பட்டாக வேண்டும். மற்றவர்களுக்கு இந்த அவை என்றால் ஒரு அச்ச உணர்ச்சி ஏற்பட்டால்தான் இந்த அவையின் மதிப்பும் மரியாதையும் பாரம்பரியமும் காப்பாற்றப்படும். ஆகையால் இந்த அவையை அவமதிப்பவர்களைத் தண்டிப்பதைக் குறைக்க வேண்டும் என்று கேட்போமேயானால், இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகும் என்றுதான் சொன் னேன். அன்று ஒரு துண்டு அறிக்கைதான் வீசப்பட்டது. 3 நாட்கள் சிறைத் தண்டனை என்று குறிப்பிட்டேன். ஆனால் இப்பொழுது 6 தாள்கள் சேர்த்து வீசப்பெற்றிருக்கிறது. (சிரிப்பு) அதற்கு 3 நாட்கள் என்று அனுமதித்தால் இனிமேல் அது 200 பக்கங்கள் கொண்ட புத்தகங்களாக மாறினாலும் மாறிவிடக் கூடும்.

அதற்குப் பிறகு பெரிய கட்டே, பெரிய பாறாங்கல்கூட விழுந்தாலும் விழலாம். அன்றைக்கு நாம் ஓரளவிற்குச் சலுகைகள் தந்தோம். அப்படித் தந்துகொண்டே போவோமானால்—ஒரு அச்சநிலை ஏற்படவேண்டும் என்று செய்கிறோமே தவிர யாரை யும் தண்டிக்க வேண்டும் என்பதல்ல. அதைவிட அதிகமான அளவிற்குப் புத்தகத்தை எறியக்கூடிய அளவிற்கு வந்து பிறகு மேலும் மேலும் இது வளர இடம் தரக்கூடாது என்பதால்— ஏழு நாட்கள் என்பதே மிக மிகக் குறைவு. இதை வழக்கு மன்றத்தில் கொண்டு போய் நிறுத்தியிருப்போமானால் குறைந்தது மூன்று மாதங்களாவது தந்திருப்பார்கள். எனினும் உறுப்பினர் களின் பெருந்தன்மை அடிப்படையில் ஏழு நாட்கள் என்பதற்கு ஐந்து நாட்கள் என வேண்டுமானால் குறைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :—

"இன்று (6-2-1981) பகல் சுமார் 11-00 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிக் கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்டம், பாப னாசம் வட்டம், கீழ்க்கபிஸ்தலத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, 9 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிப்பவருமான திரு. மாரிமுத்து என்பவரின் மகன திரு. எம். சரவணன் என்று சொல்லிக்கொள்ளும் நபர் பெரும் குற்றம்

புரிந்துள்ளார். அவரது இச்செயல் பேரவையை அவமதிக்கும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. அவர் ஐந்து நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

மாற்றுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

5. முதல் துணை நிதி அறிக்கை 1980—81—விவாதம்—தொடர்ச்சி.

திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மேல் பேசுகிற வாய்ப்பு பெற்றமைக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எனது வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் போர்த் தளபதியாக இருந்து இந்தத் துணை நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிற என் மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்களின் ஒவ்வொரு அறிக்கையும் பாராட்டுக்குரிய அறிக்கைகளாக அமைந்திருக்கின்றன. ஆகவே அவைகளை நான் முழு மனதோடு வரவேற்று என்னுடைய தொகுதி பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தொப்பையாறு அணை கட்டுவதற்கு நமது புரட்சித் தலைவர் அமைச்சரவையில் உள்ள திரு. இராஜா முகமது அவர்கள் பொறுப்பேற்ற பிறகு செயல்பட்டு வருகிறார்கள். அதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். ஆனால் அதில் சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. விடுபட்ட அந்தப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று என் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசை மாற்று வாரியம் என்பது, தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் குடிசைகள் மாற்றப்பட்டு வீடுகள் கட்டி அவற்றை ஒப்படைக்கிற பணியைச் செய்து வருகிறார்கள். ஆனால் என் தொகுதி இருக்கிற தர்மபுரி மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியம் எப்படி இருக்கும் என்று கூட அறிய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே தர்மபுரி மாவட்டத்தில், என் தொகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக வீடுகளைக் கட்டி அவற்றை அவர்களுக்கு ஒப்படைக்கிற பணியினைத் தொடங்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.